மாண்புமிகு திரு. க. இராசாராம் : 1969-70-ல் மத்திய அரசின் ஒப்பளிப்பின் பேரில் ஆயுள் இன்ஸ்யூரன்ஸ் கார்ப்பரேஷனிடமிருந்து கடனாகக் கிடைத்த தொகையில் ரூ. 10 லட்சம் மத்திய தர வகுப்பினர் வீடு கட்டுவதற்கு வீட்டு வசதி வாரியம் (கூட்டுறவு பிரிவு) மூலம் கடனாக வழங்கப்பட்டிருக்கிறது.

Engineers in Electricity Board

*486. Q.—Dr. H. V. HANDE : **Will the Hon. the Minister** for Electricity be pleased to state—

(a) the number of engineers of the Public Works Department working on deputation in 1969-70 and 1970-71 in the State Electricity Board;

(b) the terms and conditions of deputation; and

(c) total number of engineers absorbed in the regular service of the Electricity Board?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : அவையின் முன் ஓர் அறிக்கை @ வைக்கப்பட்டுள்ளது.

Dr. H. V. HANDE : Sir, may I know whether any deputation met the present Hon. Minister or the previous Hon. Minister for Electricity and Expressed any grievances with regard to their service conditions?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : தலைவரவர்களே, சமீபத்தில் என்னை வந்து பார்த்தார்கள். இது இரண்டு இலாகாக்களும் சேர்ந்து முடிவு செய்யப்படவேண்டிய காரியமாகும். விரைவில் முடிவு செய்யப்படும்.

திருப்பூரில் தொழிற்சாலைகளுக்கு மின் சக்தி வழங்கல்

* 487 வினா—திரு. சு. துரைசாமி : மாண்புமிகு மின்சாரத்துறை அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா—

திருப்பூர் நகரத் தொழிற்சாலைகளுக்குப் போதிய மின்சார அழுத்தம் இல்லாத குறைபாட்டை போக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன ?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன் : கோவை-ஈரோடு 66 கிலோ வோல்ட் கம்பி இணைப்பை 110 கிலோ வோல்ட் கம்பி இணைப்பாக மாற்றுவதற்கான வேலைகள் தொடங்கப்பெற்று நடந்து வருகின்றன. இவ்வேலைகள் பூர்த்தியானதும் திருப்பூரில் மின் அழுத்தத்தில் கணிசமான அளவுக்கு முன்னேற்றம் இருக்கும்.

@ 218—220-ம் பக்கங்களில் மூன்றும் இணைப்பாக அச்சிடப்பட்டுள்ளது.